IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.29/2022
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.55 PM.

பி.வா.சா. 1 சாட்சி கார்த்திகேயன் த.பெ.அழகர்சாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 09.02.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. எனது மீது என்ன வழக்கு வாதி தாக்கல் செய்துள்ளார் என்பதை தெரிந்துகொண்டேன் என்றால் தெரிந்துகொண்டேன். என்ன வழக்கு என்றால் சொத்து வேண்டும் என்று வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண். 60/7 ற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ2 ல் ஆவணத்தில் 1வது தாளில் பின்புறமாக உள்ள 2வது புகைப்படம் பூச்சம்மாள் என்றால் சரிதான்.

2. பூச்சம்மாள் புகைப்படத்திற்கு நேராக அவரது கணவர் பெயர் பொன்னையநாயக்கர் என்ற பெருமாள்நாயக்கர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் கிரைய பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. மேற்படி வாதியின் கிரைய ஆவணம் 15.07.2010 ல் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் தெரியாது. 16.05.2013 ல் வாதி கிரையம் பெற்றார் என்றால் தெரியாது. எதிர்வழக்குரை விபரம் நான்தான் சொன்னேன் என்றால் சரிதான். மேற்படி எதிர்வழக்குரையில் மேற்படி 2 ஆவணங்கள் குறித்தும் குறிப்பிட்டுள்ளேன்

என்றால் தெரியாது. மேற்படி விபரம் தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. பி.வா.சா.ஆ. 3 ஆவணம் எனது பத்திரம் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ. 3 ல் புகைப்படம் எதுவும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ3 ஆவணத்தில் 8 ரேகை உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ3 ஐ எனக்கு 7 பேர்தான் எழுதிகொடுத்தார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 3 ல் சாட்சி கையெழுத்து செய்த பாப்பா யார் என்றால் செல்லம்மாள் மகள் ஆவார். மேற்படி செல்லம்மாள் பி.வா.சா.ஆ. 3 ஆவணத்தின் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். முத்தம்மாள் யார் என்றால் செல்லம்மாளின் மகள் ஆவார்.

4. பி.வா.சா.ஆ3 ஐ தயாரித்தவரின் உரிமம், விலாசம், பெயர் எதுவும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ3 ஆவணத்தில் பூச்சம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று உள்ளது என்றால் பொன்னையா நாயக்கரின் மனைவி பூச்சம்மாள் கிடையாது, பி.வா.சா.ஆ3 ல் உள்ள பூச்சம்மாள் வேறு பூச்சம்மாள் ஆவார். பெருமாள் நாயக்கரின் மனைவி பூச்சம்மாள் என்ற வாசகம் பி.வா.சா.ஆ 3ல் இல்லை என்றால் சரிதான். பட்டாவில் உள்ளது. மேற்படி பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பெருமாள் நாயக்கரின் மனைவி பூச்சம்மாள், பொன்னையா நாயக்கரின் மனைவி பூச்சம்மாள் என்பதற்கு வாரிசு சான்றிதழோ, இறப்பு சான்றிதழோ எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ3 ஆவணம் நான் பொய்யாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. நான் சரியான நபரிடம் உண்மையான பூச்சம்மாள் வாரிசிடம் நான் கிரையம் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)
முடிவடையும் நேரம்: 01.10 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.09 10:20:54 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.